# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. செ. தேவராஜன், மின்குறைத் தீர்ப்பாளர்**
**மேல்முறையீட்டு மனு எண். 44 /2018**

திரு. R. விவேகானந்தன், தலைவர்,
மதுரை டீச்சர்ஸ்சிட்டி குடியிருப்போர் நலச்சங்கம்,
அழகர் கோயில் மெயின்ரோடு,
பூண்டி விலக்கு, மதுரை – 625 301. .... மனுதாரர்
(திரு. R. விவேகானந்தன்)

எதிர்

செயற்பொறியாளர்/O&M/கிழக்கு/மதுரை,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
புது நத்தம் ரோடு,
திருப்பாலை, மதுரை – 14. .... எதிர்மனுதாரர்
(திரு.M. முத்துமாதேஷ், உதவி செயற்பொறியாளர்/ஒத்தகடை)

**கேட்புரை நாள் : 08.11.2018**

**ஆணை நாள் : 18–12–2018**

1. திரு. R. விவேகானந்தன், மதுரை டீச்சர்ஸ்சிட்டி குடியிருப்போர் நலச்சங்கம், அழகர் கோயில் மெயின்ரோடு, பூண்டி விலக்கு, மதுரை – 625 301 அவர்களின் 31.08.2018 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 44/2018 ஆக பதிவு செய்யப்பட்டடது.

2. மேல்முறையீட்டாளர் மதுரை டீச்சர்ஸ்சிட்டி குடியிருப்போர் நலச்சங்கம் அமைந்துள்ள பகுதியில் குறைவான மின் அழுத்தம் சீர்படுத்துதல் மற்றும் புதிய மின்மாற்றி அமைக்கக் கோருதல் தொடர்பாக தனது மேல்முறையீட்டை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டு இசைவிணக்கம் எதுவும் ஏற்படவில்லை எனில் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 25.9.2018 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளரின் அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. 08.11.2018 அன்ற நடைபெற்ற விசாரணையின்போது திரு. ஆர். விவேகானந்தன் அவர்கள் மேல்முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளதின் பேரில் டீச்சர்ஸ்சிட்டி பகுதியை ஆய்வு செய்து அப்பகுதிக்கு உள்ளேயே மேலும் ஒரு புதிய 100 KVA மின்மாற்றி அமைப்பதற்கு உரிய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அனுமதி கிடைக்கப்பெற்று உரிய தளவாட சாமான்கள் ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் புதிய மின்மாற்றி அமைக்கப்பட உள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்தார். மேலும் புதிய மின்மாற்றி 10.12.2018 க்குள் அமைத்து தரப்படும் என்றும் எதிர்மனுதாரரால் தெரிவிக்கப்பட்டது.

5. இதனிடையே, மேல்முறையீட்டாளர் தன்னுடைய 14.12.2018 நாளிட்ட மின் குறைதீர்ப்பாளருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தில் தங்கள் மதுரை டீச்சர்ஸ் குடியிருப்போர் நலச்சஙகம் பகுதியில் புதிய மின்மாற்றி திருப்திகரமாக நிறுவப்பட்டு சீரான மின்சாரம் பகுதி மக்களுக்கு கிடைத்துவருவதாக தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரின் கடிதத்தில் உள்ள சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*“ வணக்கம்,*

*மேலான தங்கள் முன்னிலையில் **08.11.2018**ஆம் தேதியன்று நடைபெற்ற விசாரணையின்போது **10.12.2018**க்குள் புதிய மின்மாற்றி அமைத்துத் தருவதாக உதவி செயற்பொறியாளரால் உறுதியளிக்கப்பட்டது. அதற்கு முன்னதாக **08.12.2018**ம் தேதியன்றே புதிய மின்மாற்றி திருப்திகரமாக நிறுவப்பட்டு சீரான மின்சாரம் எங்கள் பகுதி மக்களுக்கு கிடைத்து வருவது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது.*

*மக்கள் பணியில் இன்முகத்துடன் கூடிய திரு. மு. முத்துமாதேஸ், உதவி செயற்பொறியாளரின் ஈடுபாடு பாராட்டுக்குரியது. அவரது பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.*

*இப்பணியில் பஙகேற்ற அலுவலக பெருமக்கள் அனைவருக்கும் எங்களது சஙகத்தின் சார்பாக செஞ்சார்ந்த நன்றியினை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*ஒப்பம் / XXX XXX XX*
*(R. இரமேஷ் )*
*செயலாளர்*

*ஒப்பம்/XXX XXX XX*
*(இரா. விவேகானந்தன்)*
*தலைவர் ”*

6. மேல்முறையீட்டாளர், தனது 14.12.2018 நாளிட்ட கடிதத்தில் மதுரை டீச்சர்ஸ் சிட்டி குடியிருப்போர் நலச்சங்கம் பகுதியில் புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டதால் அப்பகுதிக்கு மின்சாரம் சீரான மின்சாரம் கிடைத்து வருகிறது என்று தெரிவித்துள்ளார்.

7. எனவே, மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான புதிய மின்மாற்றி அமைத்து சீரான மின்சாரம் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேறிவிட்டது என்பதால் மேற்கொண்டு இந்த மேல்முறையீட்டு மனுவின் மீது எந்தவொரு நடவடிக்கையும் தேவையில்லை என்று முடிவு செய்து மேல்முறையீட்டு மனு எண்.44/2018 முடித்து வைக்கப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
1. திரு. R. விவேகானந்தன்,
மதுரை டீச்சர்ஸ்சிட்டி குடியிருப்போர் நலச்சங்கம்,
அழகர் கோயில் மெயின்ரோடு,
பூண்டி விலக்கு, மதுரை – 625 301.

2) செயற்பொறியாளர்/O&M/கிழக்கு/மதுரை,
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
புது நத்தம் ரோடு,
திருப்பலை, மதுரை – 14.

3) தலைவர்
தமிழ்நாடு மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம்
(மேற்பார்வைப் பொறியாளர்)
மதுரை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கே. புதூர், மதுரை – 625 007.

4) தலைவர்
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை
சென்னை – 600 002.

5)  செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணிணி) – **<u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளிடுவதற்காக</u>**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.